2005 மார்ச் 29]

ஆண்டும் 10 நாட்கள் அதனுடைய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று, கேரளாவிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். இந்தக் கோயிலில் கமிட்டி அமைப்பதற்கு தேவஸ்வம் போர்டிலிருந்து பொறுப்பான தலைவர்களும், அமைச்சர் அவர்களும் முயற்சி செய்து, அதற்கான வசதிகளை உருவாக்கித் தருவார்களேயானால், அந்த கமிட்டிக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தரலாம் என்று அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டு, இந்தக் கோயிலினுடைய நிலையை உணர்ந்து, அமைச்சர் அவர்கள் இந்தக் கோயில்மீது தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று மீண்டும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரையிலும் சரித்திரத்திலே இல்லாத அளவிற்கு 3,800 ஆலயங்களில் திருப்பணி செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 21 ஆம் தேதி அன்று 753 ஆலயங்களுக்கு அம்மா அவர்கள் திருப்பணி செய்வதற்கு ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், இங்கே தாங்கள் சொல்லிய அந்த ஆலயத்திற்குத் திருப்பணிக் குழு அமைத்து, வசதி படைத்தவர்களிடம், ஆன்மீக பக்தர்களிடத்திலே நீங்கள் வசூல் செய்து, திருப்பணி செய்வதற்கு முன்வருவீர்களேயானால், அரசின்மூலமாக மானியம் கொடுக்கப்பட்டு, அந்தத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 236, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

236—

மருத்துவமனை வசதிகள்

***42347—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், கூடுதல் மருத்துவர்கள் நியமிக்கவும் தற்போது அரசின் பரிசீலனையில் கருத்துரு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 237, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

237—

ஆரம்ப சுகாதார நிலையம்

***50882—திரு. ஜி.** பழனிசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் கிராமத்திலே அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 238, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS